# நாகர்கோவில் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரிக்கு விருது !

தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நாட்டுநலப்பணித் திட்டத்தின் பணிகளைச் சிறப்பாக செயல்படுத்தும் கல்லூரி மற்றும் திட்ட அலுவலர்களை ஊக்குவிக்கும் வகையில் விருதுகள் வழங்குவது வழக்கம். அதன் அடிப்படையில், கடந்த 2016-17ம் கல்வியாண்டிற்க்கான நாட்டுநலப்பணித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக நாகர்கோவில் அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி சிறந்த கல்லுரியாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்கல்லூரியின் திட்ட அலுவலராக பணியாற்றிவரும் மின்னியல் துறை விரிவுரையாளர் திருமதி. ஜெரால்டின் அகிலா அவர்கள் 2016-17ம் ஆண்டிற்கான சிறந்த நாட்டுநலப்பணித் திட்ட அலுவலராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தொழில்நுட்பக் கல்வி இயக்கத்தில் நடந்த விருது வழங்கும் விழாவில் நாட்டுநலப்பணித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய கல்லூரிக்கான விருதை கல்லூரி முதல்வர் திரு.சு.ராஜா ஆறுமுக நயினாரும், சிறந்த நாட்டுநலப்பணித் திட்ட அலுவலருக்கான விருதை திருமதி. ஜெரால்டின் அகிலாவும், தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்கக ஆணையர் முனைவர்.பழனிசாமி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டனர். அப்பொழுது, நாட்டுநலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சீத்தாராமன் உடனிருந்தார்.

விருது பெற்ற கல்லூரி முதல்வர் மற்றும் நாட்டுநலப்பணித் திட்ட அலுவலர் ஆகியோரை கல்லூரி ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் பாராட்டி, வாழ்த்தினார்கள்.




தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்


தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்


தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்